International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 02 April to June 2020 www.irjtsjournal.org

# புறநானூற்றில் காணப்படும் உவமை நயம்

முனைவர். மா.சீனிவாசன்.
*உதவிப் பேராசிரியர்,*
*தமிழ்த்துறை.*
*சோலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*T. செட்டியபட்டி, உசிலம்பட்டி.*

**முன்னுரை :**

மேற்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவற்றுள் தொகை நூல்கள் எட்டு, நெடும்பாடல்கள் பத்து. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் பழந்தமிழர்களின் புற வாழ்வை வெளிப்படுத்துவன. சேரமன்னர்களின் பெருமை பேசும் நூல் என்ற அளவில் பதிற்றுப்பத்து அமைந்து விடுகின்றது. ஆனால், புறநானூறோ முப்பெரும் வேந்தர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள், படைத்தலைவர்கள், வீரர்கள், மறக்குடி மகளிர், புலவர், பாணர் ஆகிய கலைக்குடும்பத்தினர் முதலியோர் பற்றிய பல்வேறு செய்திகளை வழங்கும் இலக்கியப் பெட்டகமாக அமைந்திருக்கிறது.

இவ்வாறு சிறந்து விளங்கும் புறநானூறு என்னும் சங்க இலக்கியத் தொகை நூலின் பாடல்களில் காணப்படும் உவமை நயம் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

**இயற்கையுடன் ஒப்பிட்டுக் கூறப்படும் உவமை :**

புறநானூற்றின் இரண்டாம் பாடல் முரஞ்சியூர் முடிநாகனார், சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை பற்றிப் பாடியது.

இதில், இயற்கையுடன் ஒப்பிட்டு உதியஞ்சேரலாதனின் பண்பு, நலன்களை முடிநாகனார் வெளிப்படுத்தும் உவமை நயம் போற்றத்தக்க வகையில் அமைந்துள்ளது.

**“மண்திணிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்புதை வரு வளியும்**
**வளிதலை இய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பூதத்து இயற்கை போலப்**
**போற்றார்ப் பொறுத்தலும், சூழ்ச்சியது அகலமும்**
**அலியும் தெறலும் அளியும் உடையோய்!”**[1] (புறம். 2)

நிலத்தைப் போல பகைவரைப் பொறுத்துக் கொள்ளலும், வானத்தைப் போல விரிந்த ஆராய்ச்சித் திறனும், காற்றைப் போல வலிமையும், தீயைப் போல பகை அழிக்கும் ஆற்றலும், நீரைப் போல அருள் புரிதலும் உடையவன் உதியஞ்சேரலாதன் என முடிநாகனார் ஒப்பிட்டுக் கூறுவது மிக நல்ல உவமையாக அமைந்துள்ளது.

உவமை என்பது ஏதோ திட்டமிட்டுப் படைப்பது இல்லை, கவிஞர் தான் வாழ்வில் ஏதாவது, ஒரு காலக்கட்டத்தில் கண்ணால் கண்ட பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் தேவைப்படும் போது தமது படைப்புகளில் படைத்து தனிநிலை அடைவார்கள். [2] (உவமை உலா, ப. 71)

மேலும், நிலவுலகத்து வாழும் மக்கட்கு இறைவனாய் திகழும் வேந்தன், உலகத்தின் கூறுகளான நிலம் முதலிய ஐந்தன் இயல்புகளையும் உடையனாதல் வேண்டும் [3] (சேரமன்னர் வரலாறு, ப. 64) என்ற முடிநாகனாரின் கூற்றோடு உவமையை ஒப்பிட்டு அறியலாம்.

**விலங்குகளோடு ஒப்பிட்டுக் கூறப்படும் உவமை :**

அதியமானின் பண்புகளைக் கூற வந்த ஔவையாரின் புறப்பாடல் இது. அதில் அதியமானை, இனியன் என்பதற்கு ஔவை உரைத்த உவமையே மிக இனியது,

**“ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழா அலின்**

**நீர்த்துறை படியும் பெருங்களிறு போல**

**இனியயை பெரும எமக்கே மற்றதன்**

**துன்னருங் கடாஅம் போல**

**இன்னாய் பெருநின் ஒன்னா தோர்க்கே”[4] (புறம். 94)**

நீர்த்துறையில் படிந்து நீராடச் செல்லும் களிறு உள்ளமும் குளிர்ந்து ஊறு செய்யாது தன்மீது ஏறி, தன்னைக் கழுவி விளையாடும் சிறுவர்களைப் பொறுத்திருத்தல் போல், என்னைப் போன்ற புலவர்களுக்கு காட்சிக்கு எளியனாய்க் கடுஞ்சொல்லின் அல்லனாய்த் திகழ்கிறாய். அத்துணை இனியனாகிறான் அதியன் என்கிறார் ஔவை. மேலும், சிறுவர்கள் விளையாடும் அதே களிறு மத நீராடுகையில் அதனை வளர்த்த பாகனும் நெருங்க அஞ்சுமாறு நிற்றல் போல், உன்னைப் பகைத்தவர்க்கு நீ அஞ்சுவதற்குரியவன் என்கிறார். இந்த களிற்று உவமையால் அதியனின் வீரமும், பண்பும் காட்டப்படுகிறது.

**“அணிற்பல அன்னகொங்குமுதிர் முண்டகத்து**

**மணிக்கேழ்அன்ன மாநீர்ச் சேர்ப்ப”**

என்ற குறுந்தொகைப் பாடலில் கடல் முள்ளியும் கடலும் காட்டப்படுகின்றன.

தாது மிகுதியாகவிருக்கும் மலர்களையுடைய முள்ளிச் செடியினை முட்கள் நீட்டிக் கொண்டு நிற்கின்றன. இவை, அணிலின் பற்கள் போலப் காணப்படுகின்றன. கடல் நீரோ நீலமணி போன்ற நிறமுடையதாக இருக்கின்றது. இவற்றுள் அணில் பல் பற்றிய உவமை கூர்ந்து நோக்கி எழுதப்பட்ட புதுமையழகு உடைய உவமையாகும். அழகுக்காக உவமை இடம் பெறுவதை விட கருத்தை விளக்கவும், அதனைப் பதியவும் வைக்கிறது. [5] (புதுமை இலக்கியப் பெட்டகம், ப. 39)

மேலும்....,

**“பாங்கு உரித்தன்ன வான்பூங் கலிங்க மொடு”[6]** (புறம். 397)

என்ற புறநானூற்றுப் பாடலில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இரவலர்க்கு நல்கிய உடையானது பாம்பின் சட்டை போன்ற சிறந்த பூ வேலைப்பாடு அமைந்தது என்று பாம்பை வைத்து அழகிய உவமை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**“வேனில கோங்கின் பூம்பொகுட்டு அன்ன**

**குடந்தைஅம் செவிய கொட்டு எலி”[7]** (புறம். 321)

என்னும் மற்றொரு புறநானூற்றுப் பாடலில் கோடையில் மலரும் கோங்கம் பூவின் விதையைப் போன்ற வளைந்த காதினை உடையது எலி என்று உவமை அமைத்து எலியின் காதினை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது.

**வீரமும்,ஈரமும் ஒப்பிட்டுக் கூறப்படும் உவமை :**

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பற்றி பாடும் போது..,

**‘‘அங்கண் விசும் பின் ஆரிருள் அகற்றும்**

**செங்கதிர்ச் செல்வன் போலவும், குடதிசைத்**

**தண்கதிர் மதியம் போலவும்**

**நின்று நிலையியர் உலகமோ டுடனே...’’** [8] (புறம். 56)

என்னும் அடிகளில், ஞாயிறு இருளகற்றுதலாலும் திங்கள் பிறை தொழப்படலாலும் பாண்டியனுக்கு அவை உவமையாயின என்கிறார். பகை இருள் அகற்றுவதில் சூரியனாகவும், மக்கள் வணங்கதக்க நிலையில் குளிர்ந்த நிலவைப் போலவும் நிலைத்து வாழ்க என்ற உவமை விளக்கம் நன்மாறனின் ˙ வீரத்தையும்,ஈரத்தையும் எடுத்துரைக்கின்றது.

மற்றொரு புறநானூற்று பாடலில்.., மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார், பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பற்றி கூறும் போது...,

**‘‘ஞாயிறு அனையநின் பகைவர்க்குத்**

**திங்கள் அனையை எம்மனோர்க்கு!’’**[9] (புறம். 59)

என்று பாண்டியனின் வீரத்தையும்,ஈரத்தையும் ஒப்பிடுகின்றார். பகைவரை ஞாயிறு போல சுட்டெரித்தலும், புலவர்களுக்கு திங்கள் போல குளிர்தலும் உவமையாகி வாழ்த்தப்பட்டுள்ளன.

சாத்தனாரைப் போல இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தின் மதுரைக் காண்டத்தின் தொடக்கத்திலேயே, பாண்டியனை வாழ்த்தி வாழ்த்தொலியை முழங்கச் செய்கின்றார்.

**‘‘வடிவேல் எறிந்த வான்பகை பொறாஅது**

**பற்றுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்**

**குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள**

**வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு**

**தென்திசை ஆண்ட தென்னவன் வாழி!’’**[10]

(தமிழ் வளர்த்த கவிஞர்கள், பக். 73-74)

என்று பாண்டியனை வாழ்த்திப் பாடுகிறார். இதன் மூலம் பாண்டியர்களின் தொன்மை வீரமும்,ஈரமும் விளங்குகிறது.

**கொடைப்பண்பினை ஒப்பிட்டுக் கூறப்படும் உவமை :**

தனக்கு கனி கொடுத்த அதியனின் கொடைப்பண்பைப் பாராட்ட நினைத்த ஔவையின் உள்ளத்தில் நீடு வாழும் சிவபெருமான் தான் நினைவிற்கு வருகிறான்...,

**''பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**

**நீலமணி மிடற்று ஒருவன் போல**

**மன்னுக பெரும நீயே தொன்னிலைப்**

**பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட**

**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது**

**ஆதல் நின்னகத்து அடக்கிச்**

**சாதல நீங்க எமக்கு ஈத்தனையே!''**[11] (புறம். 91)

புலவர்களிடமும், தன்னை நாடிவரும் இரவலர்களிடமும் பேரன்பு கொண்டு, பெரும் பொருள் கொடுப்பவன் அதியன். தனக்கு அவன் அருளிய திறத்தைப் பாடும்போது, அதியனை –''நீலமணி மிடற்று ஒருவன் போல'' என்று சாகா வரம் அருளும் சிவபெருமானை உவமையாக்கி ஒப்பிட்டு வியப்படைகின்றாள் ஔவை. ஆதியும் அந்தமும் இல்லா இறைவன், ஆலகால விஷத்தை அருந்தியும் உலகத்தைக் காத்து நிலைபெற்றவன் - அதனால் ''நீலமணி மிடற்று ஒருவன்'' என்று குறிப்பிட்டு, அவனுக்கு இணையாக கனி கொடுத்த அதியனை ஔவை ஒப்பிடுகின்ற உவமை சிறப்பான ஒப்பிடுதல் ஆகும்.

ஔவையைப் போலவே, வைரமுத்துவும் நீலகண்டனை நினைத்து வேண்டுகின்ற கவிதை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது...,

**''சாமி திருநீலகண்டா!......,**

**பூமியை விஞ்ஞானம்**

**கடைந்த பொழுது**

**எந்திரம் துப்பிய விஷத்தையெல்லாம்**

**அடுத்தொரு மிடறு**

**அள்ளிக் குடித்தால்**

**நான்கூடக் கோயிலுக்குப் போவேன்''**[12]

(தமிழுக்கு நிறம் உண்டு, ப.110)

**அவல நிலையை ஒப்பிட்டுக் கூறப்படும் உவமை :**

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பரிசில் வேண்டி வெளிமானிடம் சென்ற நேரத்தில் அவன் இறந்து விடுகிறான். பெருஞ்சித்திரனார் மிகுந்த ஏமாற்றமும் துயரமும் அடைகின்றார். அந்நிலையில் பாடிய பாடல்....,

**“மாரி இரவின் மரங்கவிழ் பொழுதின்**

**ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்**

**கண்ணில ஊமன் கடற்பட் டாங்கு”**[13] (புறம். 238)

பெருஞ்சித்திரனார், தம்முடைய அவலநிலைக்கு கண் இல்லாத ஊமையன் ஒருவன் மழை பெய்து கொண்டிருக்கும் இரவுப் பொழுதில் அவன் சென்ற மரக்கலம் கவிழ்ந்து கடலில் விழுந்ததற்கு ஒப்பிடுகின்றார். அவலநிலையிலும், இந்த உவமை நயம் புலவரின் மேல் இரக்கத்தைக் காட்ட வழிவகுக்கின்றது.

மற்றொரு புறநானூற்றுப் பாடலில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கச் செல்கையில் பிசிராந்தையார் வருவார் எனக் கூறியதை யாரும் நம்பவில்லை. எனவே, அவர் வந்த போது வியப்பு மேலிட புலவர் பொத்தியார் பாடுகின்றார்...

**“வருவன் என்ற கோனது பெருமையும்**
**அது பழுதின்றி வந்தவன் அறிவும்**
**வியந்தொறும் வியந்தொறும் வியப் பிறந்ததன்றே!”**[14] **(புறம். 217)**

இங்கே, கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர் விடுகின்ற அவல நிலையில்..., உவமை நயத்துடன் புலவர் பொத்தியார் வியப்படைகின்றார்.

பிசிராந்தையார் ‘வருவன்’ என்று சொன்ன சோழனின் சொல்லுக்கு பெருமைப் பண்பை ஒப்பிட்டு உவமையாக்கி நட்புடன் வந்த பிசிராந்தையாரின் செயலுக்கு அறிவு நிலையை ஒப்பிட்டு உவமையாக்கி பொத்தியார் வியப்பின் எல்லையில் நிற்கின்றார். இதனைப் படிப்போர் அனைவரது உள்ளத்தையும் இந்த உவமை ஒப்பிடு வியப்பைத் தருவதாக அமைந்துள்ளது.

**முடிவுரை :**

புறநானூற்றுப் புலவர்கள் கையாண்டுள்ள உவமைகள் படிப்போர் உள்ளத்தில் உவகையைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளன. உவமை விளக்கு போன்றது எனலாம். தெளிவாகக் காண விளக்கின் துணையை நாடுகிறோம். விளக்கின் ஒளியில் அதனைச் சுற்றியுள்ள பிற பொருள்களை விளங்கக் காண்கிறோம். அதுபோலவே, உவமைகள் தம்மையும் விளக்கி, கருதிய பொருளின் மாண்பையும் விளக்குகின்றன. அந்த வகையில் சங்க இலக்கியத்தில் சிறந்து விளங்கும் புறநானூற்றில் காணப்படுகின்ற உவமைகள் வியந்து பாராட்டத்தக்க வகையில் அமைந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்** :

[1] புறநானூறு, பாடல் 2
[2] முனைவர் செ.ரவிசங்கர், உவமை உலா, ப. 71
[3] ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை, சேரமன்னர் வரலாறு, ப. 64
[4] புறநானூறு, பாடல் 94

[5] முனைவர் செ.ரவிசங்கர், புதுமை இலக்கியப் பெட்டகம், ப. 39
[6] புறநானூறு, பாடல் 397
[7] புறநானூறு, பாடல் 321
[8] புறநானூறு, பாடல் 56
[9] புறநானூறு, பாடல் 59
[10] நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு, தமிழ் வளர்த்த கவிஞர்கள், பக். 73-74
[11] புறநானூறு, பாடல் 91
[12] கவிஞர் வைரமுத்து, தமிழுக்கு நிறம் உண்டு, ப. 110
[13] புறநானூறு, பாடல் 238
[14] புறநானூறு, பாடல் 217